
உ
சிவமயம்

# திருவேடகம்
# அருள்மிகு ஏடகநாத சுவாமி
# திருக்கோயில்



## தல புராணம்

1986

★

மதுரை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை
துணை ஆணையாளர்
உயர்திரு **பா. அருணாசலம்**, பி. ஏ., பி. எல்.,

உதவி ஆணையாளர்
உயர்திரு **எஸ். கனகய்யா**,
பி. எஸ்சி., பி, எல்.,

ஆகியோரின் நல்வாதரவினால்
இந்த புராணம் தொகுத்து வெளியிடப்பட்டது

திரு. **உ. ராம. மெ. சு. செ. சு. சேவு
சேவுகஞ் செட்டியார்**
பரம்பரை அறங்காவலர்

**ஆ. வன்னியப்பெருமாள்**,
நிர்வாக அதிகாரி

★

உ

சிவமயம்

# திருவேடகம்

# அருள்மிகு ஏடகநாதசுவாமி திருக்கோயில்

## தல புராணம்

### இயற்கைச் சூழ்நிலை :

திருவேடகம் என்ற திருத்தலமானது மதுரையிலிருந்து சோழவந்தான் செல்லும் பாதையில் 17 கிலோ மீட்டர் தொலைவில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைந்த ஒரு சிற்றூர் பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றல் உலவும் வைகையின் வடகரையில், சுற்றிலும் சோலையும், வயலும், தென்னையும் என இயற்கைப் பூத்துக் குலுங்கும் அற்புதமான ஆனந்தமான அமைதியான ஆத்மீகமான சூழ்நிலையில் உள்ளதுதான் திருஏடகநாத சுவாமி திருக்கோயிலாகும்.

### திருப்பணிகளும் ஆட்சி விபரங்களும்

இக்கோயில் பழங்காலப் பாண்டியர், ஆட்சிக் காலமிருந்தே பல திருப்பணிகளுக்கு இடமாகி இருக்கிறது

இருபதாம் நூற்றாண்டில் 1930-ல் நகரத்தார் மரபில் வந்த திரு. உ. ராம. மெ. சு. சேவுகன் செட்டியார், திரு. உ. ரா. மெசு. சேவுகன் செட்டியார், திரு. உ. ராம. மெ. சு மெய்யப்பச் செட்டியார் ஆகிய மூன்று குடும்பத்தாரும் பல லட்சக்கணக்கில் செலவு செய்து இக்கோயிலை மிக அற்புதமாகக் கட்டியிருக்கிறார்கள். நீண்ட கருங் கற்களை சுத்தமாக செதுக்கி கோயிலைக் கட்டியிருப்ப திலிருந்து கட்டிடக் கலைக்கு அவர்கள் ஆற்றியுள்ள மகத் தான பணி தெரியவருகிறது. கோயில் மண்டபத்தில் நிறுத்தப்பட்டுள்ள நீண்ட நெடிய தூண்களும், அவற்றில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களும் பார்ப்போரைப் பரவசப் படுத்துகின்றன. இக்கோயில் நகைகளும், வாகனங்களும் இம்மூன்று குடும்பத்தார்களாலும் செய்து வைக்கப் பட்டவையாகும்.

1928-ம் ஆண்டிலிருந்து ஸ்கீம் உத்தரவுப்படி பெரு மதிப்பிற்குரிய உ. ராம. மெ. சு. செ. சு. சுப்ரமணியஞ் செட்டியார் அவர்கள் வழிவழி அறங்காவலராக இருந்து வந்தார்கள். 8-7-71-ம் தேதியிலிருந்து அவரது குமாரர் உயர்திரு. உ. ராம. மெ. சு. செ. சு. சேவு. சேவுகஞ் செட் டியார் அவர்கள் வழிவழி அறங்காவலராக இருந்து ஆலயத்துற்கு நற்பணிகள் பல ஆற்றி வருகிறார்கள். 1958-ம் ஆண்டிலிருந்து இந்துசமயஅறநிலைய ஆட்சித்துறையினரால் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பெற்று கூட்டுப் பொறுப்பில் இருந்து வருகிறது.

## கோவில் அமைப்பு:

அழகுற அமைந்திருக்கும் வைகை ஆற்றில் அகமும் அங்கமும் குளிர நீராடி, படியேறி ஐந்தெழுத்தை ஓதிக் கொண்டு வடக்கு ரதவீதி வழியாக கோயிலின் தலைவாயிலை அடைந்தால் மொட்டைக் கோபுரம் ஒன்று தென்படுகிறது

அக்கோபுரம் விஜயநகர மன்னர்களால் தொடங்கப் பெற்று கன்னடியர், மகமதியர் முதலியவரோடு நிகழ்ந்த இடையறா போரினுல் குறையாகவே நின்று போயிற்று. அதனுல் அது மொட்டைக் கோபுரமாயிற்று.

அதனைக் கடந்து கோயிலில் உள்ள ஆற்றல் கொண்ட கம்பத்தடி மண்டபத்தைக் கண்டு நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் இருக்கும் விநாயகரையும், முருகனையும் வணங்கிவிட்டு உள்ளே சென்றால் லிங்க வடிவில் நின்று அருள்பாலிக்கும் ''பத்ரிகா பரமேஸ்வரன்'' என்று அழைக் கப்படும் ஏடக நாதரை தரிசனம் செய்கிறோம். திருஏடக நாதரை வணங்கி வலம் வந்தால் சைவத்திற்கு தாங்கள் செய்த தொண்டின் பெருமையால் 63 நாயன்மார்களும் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள். வலப்பக்கத்திலே அமர்ந் திருக்கும் பாலகணபதி, தென்முகக் கடவுளாகிய தட்சிணு மூர்த்தி ஆகியோர்களையும் தரிசனம் செய்யலாம். வட மேற்கு மூலையில் ஆறுமுகப் பெருமானும், அப்பக்கத்தில் கிழக்கு நோக்கி திரும்பினுல் அங்கே சப்தமாதாக்கள், இரட்டை விநயகர், சுப்ரமண்யர், நாகதெய்வம், சக்தி விநயகர், நாகலட்சுமி, துர்க்கை, சண்டிகேஸ்வரர் ஆகி யோரைக் கண்டு வணங்குகிறோம் அதன்பின் அனக நாடகன் (நடராசர்) திருமுன் வந்து நிற்கிறோம். அவன் சன்னதியையொட்டி நவக்கிரகங்களைச் சுற்றி வலம் வருகிறோம். வல்லபகணபதி, பூரணும்பாள், சாத்தன், யானை, சந்திரன், கார்த்திகை முதலியோர்கள் அருகில் உள்ளனர்.

திருஏடகநாத சுவாமி கருவறைக்கு இணையாக இடப் பக்கத்தில் அமைந்துள்ள ஏலவார்குழலி அம்மன் கோவிலுக்கு வருகிறோம். அம்மனை சுகந்த குந்தலாம்பாள் என்றும் அழைப்பர். அம்மன் சன்னதியில் வலம் வருகையில் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி ஆகியோரையும்,

கண்டு வணங்கி வெளி வருகிறோம்.

## தலச்சிறப்பு :

இத்திருக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருஏடகப் பெருமானைப் பிரமனும், வியாசர், பராசர் ஆகிய ரிசிகளும் குசகேது என்ற வேந்தனும், திருஞானசம்பந்தப் பெருமானும் வழிபட்டு வரம்பல பெற்றார்கள் எனத்தல புராணத்தால் அறிகிறோம். ஏடகப்பெருமானை அன்போடு மனதில் தியானித்து ஒருநாள் தங்கி பூஜை முதலிய வழிபாடுகள் செய்பவர்கள் தங்களது ஆயுள் முழுவதும் காசியில் வாழ்ந்த புண்ணியத்தை அடைவார்கள் என்றும் தல புராணம் கூறுகிறது. "உன்னிமாலும் உவணனுஞ்சேடனும் மன்னுசாத்தனும்" பூசித்தது இத்தலம். அதாவது திருமால் கருடன், சேடன் (ஆதிசேடன்) சாத்தனார் ஆகிய நால்வரும் பூசித்து வழிபட்ட தலம் என்பது பொருளாகும். இத்தலத்தை பாண்டி பதினான்கில் ஒன்றென்பர். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் விசேடம் கொண்டது.

## ஏடகத்தின் பெருமை :

"விரைவோ டிகலா விடுமே டெதிர்போய்க்
கரைசேர் தலினு லுறைகா ரணனைப்
**படுவேடகனென்** றிடவே பதியுந்
**திருவேடகமென்று** சிறந்ததுவே"

என திருவாலவாயுடையார்-திருவிளையாடற்புராணம் கழுவேற்றின திருவிளையாடல் கூறுகின்றது. 'இன்புறு செந்தில் ஏடகம்வாழ் சோலையங்கிரி" என அருணகிரி நாதரும், "வானவர் கோன் தேரேடகத்தனோடு சீதானும் வாழ்த்தும் சீராம் ஏடகத்து அறிவானந்தமே" என வள்ளலாரும்

திருவேடகத்தின் பெருமையை வாழ்த்தியின்புறுகின்றனர். ஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெற்றது இத்தலம்

## தீர்த்தம் :

1 வைகை தீர்த்தம், 2 பிரம்மனால் உண்டாக்கப்பட்ட சித்தப் பிரம்மை போக்கும் பிரம்ம தீர்த்தக்குளம் பண்டு தொட்டு இருந்து வருகிறது

## ஏடு கரை அணைந்த வரலாறு :

ஞானசம்பந்தர் வாழ்ந்த காலத்தில் (கி பி. ஏழாம் நூற்றாண்டு) மதுரையில் பாண்டியன் அரிகேசரி நெடுமாறன் ஆட்சி செய்தான். அவனுக்குப் பிறவியில் முதுகு சிறிது கூனியிருந்ததால் அவனைக் கூன்பாண்டியன் என்பது வழக்கம். அவன் ஆட்சியின் தொடக்கத்தில் சைவம் செழித்திருந்தது. அவன் சோழன் மகளாகிய மங்கையர்க்கரசி என்ற மங்கை நல்லாளை மணந்து கொண்டான். அந்த அம்மையார் சைவமதத்தில் மிகுந்த பற்று கொண்டவர். பிற்காலத்தில் கூன்பாண்டியன் சமணருடைய மாய வலையில் சிக்கி சமணனானான். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போல் மக்களில் பலர் சமணராயினர். அதனால் சைவ நன்னெறி சோம்பித் தளர்ந்தது. இந் நிலை கண்டு வருந்திய பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் ஞானசம்பந்தரின் பெருமைகளைக்கேள்வியுற்று சமண இருளைப்போக்கி சைவ ஒளியைப் பரவச் செயது மன்னனையும் மக்களையும் காத்தருளுமாறு அவர்பால் சில அடியவர்களை அனுப்பினர். அவர்கள் சென்று ஞானசம்பந்தரைப் பணிந்து முறையிட்டனர். அவர் அரசியாரின் அன்புக் கட்டளையை ஏற்று மதுரை செல்ல உறுதி கொண்டார் அப்போது அருகிருந்த அப்பர்

பெருமான் ஞானசம்பந்தரை நோக்கி, ''தாங்களோ சிறுவர்; சமணர்தம் வஞ்சனைக்கோ அளவில; அன்றியும் நாளும் கோளும் நல்லவையாக இல்லை; ஆதலின் தாங்கள் போதல் ஒண்ணாது என்று கூறினர், அதற்கு ஞானசம்பந்தர் 'பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால் பழுதணையாது' என்ற கருத்தைக் கூறி நாவுக்கரசரிடம் விடை பெற்றுப் புறப்பட்டார்.

ஞானசம்பந்தர் வந்தது கண்டு அச்சமுற்ற சமணர்கள் அவர் தங்கியிருந்த திருமடத்திற்கு தீயிட்டனர் இதனையறிந்த சுவாமிகள், ''பொய்யராம் அமணர் கொளுவும் சுடர் பையவே சென்று பாண்டியர்க்காக'' எனப்பாடினர். திருமடத்தில் வைத்த தீ வெப்பு நோயாக மாறிப் பாண்டியனைச் சென்று பற்றியது.

வெப்பு நோயால் வெந்து நொந்த பாண்டிய மன்னன் சமணர்களது மந்திர மருந்துகளால் முன்னையினும் நோய் மிகுதலையுணர்ந்து அரசியாரும் அமைச்சரும் வேண்டிக் கொண்டதற்கு இணங்கி, 'யான் உற்ற நோயை நீக்கி வென்றவர் பக்கம் சார்வான்'' எனப் பகன்று ஞான சம்பந்தரை அழைத்துவரச் சொன்னன். ஞானசம்பந்தப் பெருமான் அரண்மனைக்கு எழுந்தருளி அரசனது முடியின் பக்கமாக ஒரு பீடத்தில் அமர்ந்தார். மங்கையர்க்கரசியார் சமணர்களால் சுவாமிகளுக்கு ஏதேனும் ஊறு நேருமோ என்று அஞ்சி, மருண்டு நிற்க, அதனைக் குறிப்பாலுணர்ந்த பிள்ளையார் (ஞானசம்பந்தர்) ''மானினேர்விழி மாதராய்' என்னும் திருப்பதிகத்தை ஓதி ஆலவாய் அரன் நிற்பதால் தாம் எளியர் அல்லர் என்பதை உணர்த்தினர். பின்னர் அரசன், 'யான் உற்ற வெப்பு நோயைத் தீர்த்தார் வாதில் வென்றவராவர்' என்று கூற, சமணர்கள் பீலியினல் தடவலும் அந்நோய் மிக அதிகரித்தது. அதன்பின் பிள்ளையார் ஆலவாய் அரனை நினைத்து, 'மந்திரமாவது

நீறு' என்ற பதிகம் பாடித் தமது திருக்கரத்தால் திருநீறு பூச வெப்பு நோய் முற்றிலும் தீர்ந்தது.

அதுகண்ட சமணர்கள் தமது சமயத்திற்கு வீழ்ச்சி வந்ததாக அஞ்சி ஞானசம்பந்தப் பெருமானை அனல் வாதத்திற்கு அழைத்தனர். சம்பந்தப்பெருமான் "போக மார்த்த பூண்முலை' என்னும் திருநள்ளாற்றுப் பதிகஏட்டை நெருப்பிலிட அதுவேகாமல் பச்சென்றிருந்தது சமணர்கள் இட்ட ஏடு எரிந்து. சாம்பலாகியது. அதன் பின்னர் சமணர்கள் அவரை மீண்டும் புனல் வாதத்திற்கு அழைத்தனர் சம்பந்தப் பெருமான்,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"


என்னும் பதிக ஏட்டை வைகை ஆற்றில் இட்டார். சமணர்கள் 'அத்தி நாத்தி' என்றெழுதிய ஏட்டை ஆற்றில் விட்டார்கள். அவர்கள் இட்ட ஏடு ஆற்றோடு போயிற்று. சம்பந்தரது ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. அவர் "வன்னியும் மத்தமும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியவுடன்ஏட கப்பதியின் கரையை அணைந்தது. அதனால் தான் ஞானசம்பந்தரும் 'ஏடு சென்றணை தரும் ஏடகம்' என்று இயம்பியருளினார். அன்றுமுதல் இவ்வூர் திரு என்ற அடைமொழியுடன் திருவேடகம் என்ற பெயர் பெற்று விளங்கி வருகிறது. அவ்வேட்டில் 'வேந்தனும் ஓங்குக' என்று அருளினமையால் அரசனது கூனும் நிமிர்ந்தது.

மேற்கூறிய நிகழ்ச்சியின் நினைவாக ஏடு எதிரேறிய திருவிழா ஆண்டுதோறும் ஆவணி மாதம் முழு நிலவு (பௌர்ணமி) நன்னாளில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

## கல்வெட்டுச் சிறப்பு:

இத் திருக்கோயில் மதில் சுவர்களில் பழங்கால கல் வெட்டுக்கள் பல உள்ளன. இவை தொல்பொருள் துறை யினரால் படியெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**'சுபம்'**



# திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகம்

*3-ம் திருமுறை* *பண் — கொல்லி*

## திருவேடகம்

1 வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னியின் திருவடி புதுமலரை வைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியவர்
இன்னிசைப் பாடலா ரேடகத்தொருவனே

2 கொடி நெடு மாளிகைக் கோபுரங் குளிர்மதி
வடிவுற வமைதர மருவிய வேடகத்
தடிகளை யடிபணிந்தா ற்றுமினன்பினு
விடிபடும் வினைகள் போயில்லைய தாகுமே

3 குண்டலந் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூ ரேடகங்
கண்டுகை தொழுதலுங் கவலைநோ யகலுமே

4 ஏலமார் தருகுழ லேழையோ டெழில்பெறுங்
கோலமார் தருவிடைக் குழகனு றுறைவிடஞ்
சாலமா தவிகளுஞ் சந்தனுஞ் சம்பகஞ்
சீலமா ரேடகஞ் சேர்தலாஞ் செல்வமே

5 வரியணி நயனிநன் மலைமகண் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோ டாணலி யாகிய
வெரியவ னுறைவிட மேடகக் கோயிலே

6 பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய வேடகத்
தையனை யடிபணிந் தாற்றுமின் னடர்தரு
வெய்யவன் பிணிகெட வீசெளி தாகுமே

7 தடவரை யெடுத்தவன் றருக்கிறத் தோளடர்
படவிர லூன்றியே பரிந்தவர்க் கருள்செய்தான்
மடவர லெருக்கோடு வன்னியு மத்தமு
மிடமுடைச் சடையின னேடகத் திறைவனே

8 பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தகி
றன்னுளார் வைகையின் கரைதனிற் சமைவுற
வன்னமா மயனுமா லடிமுடி தேடியு
மின்னவா றெனவொணா னேடகத் தொருவனே

9 குண்டிகைக் கையினர் குணமிலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்
வண்டிரைக் கும்மலர்க் கொன்றையும் வன்னியு
மிண்டைசேர்க் குஞ்சடை யேடகத் தெந்தையே

10 கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீ
ரேடுசென் றணைதரு மேடகத் தொருவனை
நாடுதென் புகலியுண் ஞானசம்பந்தன்
பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே.

# ஆண்டில் நடக்கும் விழாக்கள்

| எண். | மாதம் | நாள் | விழாக்கள் |
| --- | --- | --- | --- |
| 1. | சித்திரை | 1 | சித்திரை மாதப் பிறப்பு |
| 2. | வைகாசி | 1 | வைகாசி விசாகம் |
| 3 | ஆடி | 1 | ஆடிப்பூரவிழா |
| 4. | ஆடி | 1 | கடைசி வெள்ளி (சந்தன காப்பு) |
| 5. | ஆவணி | 1 | விநாயகர் சதுர்த்தி |
| 6 | ஆவணி | 1 | ஏடு எதிரேறிய திருவிழா |
| 7 | புரட்டாசி | 9 | நவராத்திரி |
| 8. | புரட்டாசி | 1 | விஜயதசமி |
| 9. | ஐப்பசி | 1 | தீபாவளி |
| 10. | ஐப்பசி | 2 | கந்தசஷ்டி திருவிழா |
| 11. | கார்த்திகை | 4 | சோமவாரங்கள் (ஒவ்வொரு சோமவாரத்திலும் 108 சங்காபிஷேகம் |
| 12. | கார்த்திகை | 1 | திருக்கார்த்திகை விழா |
| 13. | மார்கழி | 10 | திருவாதிரைத் திருவிழா |
| 14. | மார்கழி | 30 | திருப்பள்ளி எழுச்சி |
| 15. | மார்கழி | 1 | அஷ்டமி பிரதட்சணம் |
| 16. | தை | 1 | தைப்பூசம் |
| 17. | தை | 1 | பொங்கல் பண்டிகை |
| 18. | மாசி | 1 | மாசி மகம் |
| 19. | மாசி | 1 | மகாசிவராத்திரி |
| 20. | பங்குனி | 1 | பங்குனி உத்திரம் |

## நாள் வழிபாட்டு விபரம்

| காலம் | நேரம் |
|---|---|
| *திருவனந்தல்* | காலை 6-30 |
| *விளாபூஜை* | ,, 7-30 |
| *காலசந்தி* | ,, 9-00 |
| *திரிகாலசந்தி* | ,, 9-45 |
| *உச்சிக்காலம்* | பகல் 12-00 |
| *சாயரட்சை* | மாலை 6-00 |
| *அர்த்த சாமம்* | இரவு 8-00 |

தொகுப்பு : **ஆ. வன்னியப்பெருமாள்**

---

## மதுரையிலிருந்து திருவேடகம் மார்க்கமாகச் செல்லும் நகரப் பேருந்துகள்

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து

தடம் எண். 29A, 54A, 63, 65, 68,

மதுரை அண்ணா நிலையத்திலிருந்து-தடம் எண் 28, 28A,

**தனலெட்சுமி பிரஸ்,**
யானை மஹால், 11-பி, பெருமாள் கோவில்,
மேல மாட வீதி, மதுரை-625 001